DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 125/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 19th day of March 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 1** | கிராமம் | : | நல்லிருக்கை |
| பெயர் | : | உடையாள் | தாலுகா | : | கீழக்கரை |
| க/ பெ. | : | முனியாண்டி | சமயம் | : | இந்து |
| வயது | : | 70 | ஜாதி | : | தேவேந்திர குலவேளாளர் |
| தொழில் | : | விவசாயம் | | | |

<u>நாள்: 19.03.2024</u>
<u>நேரம்: 03.25</u>

1, 2, 4, 5 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது உறவினர்கள். எனது அம்மாவிற்கு பாத்தியமான இடத்தை எனக்கு கொடுத்திருந்தார்கள். அந்த இடத்தில் தள்ளி வேலி பிடித்து இருந்தார்கள். 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 10.00 மணியளவில் 3ம் எதிரியிடம் சென்று எங்கள் இடத்தில் வேலி பிடித்திருக்கிறீர்கள் என்று சொன்னேன். அப்போது என்னை அசிங்கமாக பேசி என்மீது மண்ணை அள்ளி கொட்டினார். அதை எனது கணவரிடம் சொன்னேன். எனது கணவரும், எனது மகன் பாலசிங்கமும் காவல் நிலையம் சென்றுவிட்டார்கள். நான் அப்போது என் வீட்டில் இருந்தேன். 5 எதிரிகளும் வந்து எப்படி காவல் நிலையம் சென்றீர்கள் என சொல்லி 1, 3 எதிரிகள் என்னை தலையிலும், வலதுபக்க தோள்பட்டையிலும் அடித்தார்கள். 2, 4, 5 எதிரிகள் எனது தலைமுடியை பிடித்து இழுத்து கீழே

தள்ளிவிட்டார்கள். எனது கணவரும், மகனும் காவல் நிலையம் சென்றதால் விலக்க ஆள் இல்லை. நான் பேச்சுமூச்சு இல்லாமல் கிடந்தேன். மேற்படி சம்பவம் மாலை 4.00 மணிக்கு நடந்தது. அதன்பிறகு என்னை எனது கணவரும், மகனும் காவல் நிலையம் ஏற்றி சென்றார்கள். அதன் பின்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக என்னை சேர்த்தார்கள். அங்கு சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னிடம் வந்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அதில் நான் கைரேகை வைத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூம் தான் அது. **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும்**. நான் 7 நாட்களுக்கு மேல் சிகிச்சையில் இருந்தேன். அந்த புகாரில் எனது கணவர் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு சம்பவம் நடந்த தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் எனது உடன்பிறந்த தம்பியின் குடும்பம் என்றால் சரிதான். எதிரிகளுக்கும், எங்களுக்கும் இடையே சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருப்பதால் பேசிக்கொள்ள மாட்டோம் என்றால் சரிதான். சம்பவத்தின் போது எனது அம்மா இருந்தார் என்றால் சரிதான். எனது உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 3 பெண்கள், 1 ஆண் ஆகும். எனது அம்மா சொத்தில் எங்கள் அனைவருக்கும் பங்கு உள்ளது என்றால் இல்லை, பெண்கள் மூவருக்கும் மட்டும் தான் உண்டு. நான் எனது புகாரில் சொத்து விவரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வேலி பிடிப்பது சம்மந்தமாக எனது சகோதரிகளுக்கு நான் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். வேலி பிடிக்கும் போது ஏற்பட்ட பிரச்சனையானது எந்த தேதியில் நடைபெற்றது என்றால் தேதி, மாதம் ஞாபகமில்லை, காலை 10.00 மணியளவில் நடைபெற்றது. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் நான் எனது சகோதரிகளுக்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல, அவர்களுக்கு அதேபோல் வேறு இடம் கொடுக்கப்பட்டுள்ளதால் தகவல் சொல்ல வேண்டியது இல்லை என்பதால் தான் சொல்லவில்லை.

வேலி பிடிப்பதில் ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமான புகாரை யார் கொடுத்தது என்றால் நான் தான் கொடுத்தேன். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை, சாயங்காலம் கொடுத்தேன். எனது ஊரில் இருந்து உத்திரகோசமங்கை காவல் நிலையம் எவ்வளவு தொலைவு என்றால் 3 மைல் தூரம் இருக்கும். உத்திரகோசமங்கை காவல் நிலையத்திற்கு நான் எதில் சென்றேன் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றேன். உத்திரகோசமங்கை காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பின்னர் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தார்களா என்றால் மறுநாள் போலிசார் வந்தனர். நான் மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் இரவு 7.00 மணி, 8.00 மணி இருக்கும்.

மருத்துவமனைக்கு எதில் சென்றேன் என்றால் ஆட்டோவில் சென்றேன். யார் அழைத்து சென்றார்கள் என்றால் எனது கணவர் அழைத்து சென்றார். பிரச்சனை நடைபெற்ற போது எனது கணவர் மற்றும் எனது மகன்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். மேற்படி பிரச்சனை நடைபெற்ற போது எனது மருமகள், எனது உறவினர்கள் பக்கத்தில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது கணவரின் தம்பி மகள்கள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். எனது கணவரின் தம்பி மகள்கள் அனைவரும் அவரவர் கணவர் வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான், ஒருவர் மட்டும் உள்ளூரில் இருக்கிறார். எனது கணவரின் தம்பி மகன் வெளியூரில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரியல்ல, அப்போது ஊரில் தான் இருந்தார்.

நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் சம்பவத்தன்று இரவு 9.00 மணி இருக்கும். நான் போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் யார் யார், எதை வைத்து அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், நான் சுயநினைவு இல்லாமல் இருந்தேன், அதனால் சொல்லவில்லை. மேற்படி இடம் சம்மந்தமாக எனது அம்மா எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தபோது மேற்படி சொத்து எனக்கு எவ்வகையில் பாத்தியம் என்பதை காட்டுவதற்கான ஆவணத்தை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே இருந்த சொத்து பிரச்சனை சம்மந்தமாக நான் எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.03.19 18:41:02 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 125/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 19th day of March 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 2** | கிராமம் | : | நல்லிருக்கை |
| பெயர் | : | குருவம்மாள் | தாலுகா | : | கீழக்கரை |
| க/ பெ. | : | ஆறுமுகம் | சமயம் | : | இந்து |
| வயது | : | 60 | ஜாதி | : | தேவேந்திர குலவேளாளர் |
| தொழில் | : | விவசாயம் | | | |

<u>நாள்: 19.03.2024</u>
<u>நேரம்: 03.45</u>

1, 2, 4, 5 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

<u>அரசு தரப்பு கு.வி.</u>

கடந்த 24.09.2020ம் தேதி அ.சா.1 குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதால் அது சம்மந்தமாக அ.சா.1 கணவரும், அவரது மகனும் காவல் நிலையம் சென்றார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அன்று மாலை 4.00 மணியளவில் அ.சா.1 வீட்டில்

இருந்தபோது எதிரிகள் அனைவரும் சேர்ந்து கொண்டு போலிஸ் ஸ்டேசனில் புகார் கொடுத்தால் நாங்கள் பயந்துவிடுவோமா என்று சொல்லி கீழே கிடந்த கம்பை எடுத்து அ.சா.1 யை அடித்தார்கள் என்றால் சரியல்ல. அப்போது 3, 4, 5 எதிரிகள் அ.சா.1 ன் தலைமுடியை பிடித்து இழுத்து காலால் மிதித்தார்கள் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் கம்பை வைத்து அ.சா.1 யை தலையில் அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. இந்த சம்பவத்தை பார்த்த நானும், முனியம்மாள் மற்றும் மஞ்சுளா ஆகியோர்கள் சத்தம் போட்டு விலக்கிவிட்டோம் என்றால் சரியல்ல. அதன்பிறகு அ.சா.1 இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

**மறுவிசாரணை – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.03.19 18:41:10 +0530